[1980 பிப்ரவரி 7

(ஆ) மீன் வளர்ச்சிக் கழகம், மெக்சிகோவில் 30-8-1977 அன்று இரு இழு படகுகளையும் தன் வசம் பெற்றுக் கொண்டது. இப்படகுகள் 7-3-1978 அன்று சென்னை வந்து சேர்ந்தன. இவ்விரு இழு படகுகளுக்கும் ஈட்டுறுதி போக்குவரத்துச் செலவுஉட்பட மொத்த செலவு ஏறத்தாழ 80 இலட்ச ரூபாயாகும். வெளிநாட்டு நிறுவனத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி, விலையில் 20 சதவீதம் தொகை ஒப்பந்தம் கையெழுத்திடும் போது கொடுக்கப்பட்டது. எஞ்சியுள்ள 80 சதவீதத்தை, 13 அரையாண்டுத் தவணைகளில் கொடுக்க வேண்டும். இழு படகு களைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து 12 மாதங்கள் கழித்து 7சதவீதம் வட்டியுடன் கொடுக்கப்பட வேண்டும். மெக்சிகன்கப்பல் கட்டும் தளத்திற்கு உடனடியாக கொடுக்கப்படும் 20 சதவீதம் ரொக்கத் தொகைக்கும் காலம் தாழ்த்திக் கொடுக்கப்படும் 80 சதவீதம் தொகைக்கும் 90 சதவீதம் வரை கடன் வழங்கிய மத்திய அரசு, கப்பல்போக்குவரத்து மேம்பாட்டு நிதிக்குழுவிடம் (Shipping Development Fund Committee) ஏற்பாடு செய்துள்ளது. உடனடியாக கொடுக்கப்படும், 20 சதவீதம் ரொக்கத் தொகைக்கும் பிற செலவுகளுக்காகவும் தொடக்கத்தில், 29.90 இலட்சம் ரூபாயை வழங்கக் கப்பல் போக்குவரத்து மேம்பாட்டு நிதிக்குழு ஒப்புக்கொண்டுள்ளது.

இணைப்பு III

[......14ம் பக்கத்திலுள்ள உடுகுறியிடாத வினா எண் 86-க்கான விடையைக் காண்க]

(அ) 1979-ம் ஆண்டில், மீனவர்களுக்கு விசைப்படகுகள் வழங்க தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது.

(ஆ) அத்திட்டத்தின்படி—

(1) மீனவர்களுக்கு 1,600 மீன் பிடி விசைப்படகுகள் வழங்கப்படும் (93 மீனவர்களுக்கு 30 அடி அளவுள்ள படகுகளும், 67 மீனவர்களுக்கு 32 அடி அளவுள்ள படகுகளும் வழங்கப்படும்).

(2) படகின் மொத்த விற்பனை விலையில், 10 சதவீதத் தொகையை அரசு மானியமாக வழங்கும்.

(3) எஞ்சிய 90 சதவீத தொகையில், 5 சதவீதத்தை மீனவர்கள் ரொக்கமாக செலுத்த வேண்டும் 15 சதவீதத்தை அரசு கடனாக வழங்கும். மீதி 80 சதவீதத்தை வங்கிகள் கடனாக வழங்கும்.

1980 பிப்ரவரி 7]

(4) வங்கிகள் கடன் வழங்குவதற்கு உதவியாக விவசாய மறுநிதி அபிவிருத்திக் கழகம் நிதி உதவி வழங்கும். வங்கிகள் வழங்கும் கடனுக்கு அரசு உத்திரவாதமுண்டு.

(5) வங்கிகள் 32 அடி படகுகளுக்கு வழங்கும் கடனை 5 ஆண்டுக்குள் 45 மாத தவணைகளிலும், 30 அடி படகுகளுக்கு வழங்கும் கடனை 6 ஆண்டுகளுக்குள் 54 மாத தவணைகளிலும் 11 சதவீத வட்டியுடன் செலுத்த வேண்டும். இந்த கடனை செலுத்திய பின் அரசு கடனை சதவீத வட்டியுடன் 2 ஆண்டுகள் 18 மாத தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

(6) விவசாய மறுநிதி மேம்பாட்டுக் கழகம் நிதியுதவிக்காக குறித்துள்ள (Unit cost) 32 அடி அளவுள்ள படகின் விலையில், விற்பனை விலையைவிட குறைவாக உள்ளதால், 32 அடி அளவுள்ள ரஸ்டன் என்ஜின் பொருத்தப்பட்ட படகிற்கு ரூ. 6,481-ம், அசோக் லேலண்ட் என்ஜின் பொருத்தப்பட்ட படகிற்கு ரூ. 14,799-ம் கூடுதல் கடனாக மீனவர்களுக்கு அரசு வழங்குகிறது. இக்கடனை 14 சதவீத வட்டியில் 24 மாத தவணையில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

(7) மீனவர்களுக்கு மின்விசைப் படகு வாங்க படகின் மொத்த விலையில் 10 சதவீதம் மான்யம் தள்ளுபடி செய்தபின் விலைவிவரம் பின்வருமாறு :—

பின் படகின் விலை விவரம் பின்வருமாறு—

(அ) 30 அடி நிலுவையுள்ள படகு (ரஸ்டன் என்ஜின் பொருத்தப்பட்டது)	1,08,655.65
(ஆ) 30 அடி நிலுவையுள்ள படகு (கிர்லோஸ்கர் என்ஜின் பொருத்தப்பட்டது)	1,05,680.97
(இ) 30 அடி நிலுவையுள்ள படகு (பிரிமியர் மரைனீர் என்ஜின் பொருத்தப்பட்டது)	1,02,789.00

32 அடி நிலுவையுள்ள மின்விசை படகு

(அ) ரஸ்டன் என்ஜின் பொருத்தப்பட்டது	1,73,350.32
(ஆ) கிர்லோஸ்கர் என்ஜின் பொருத்தப்பட்டது	1,63,402.32
(இ) அசோக் லேலண்ட் என்ஜின் பொருத்தப்பட்டது	1,84,072.21
(ஈ) பிரிமியர் மரைன்னர் என்ஜின் பொருத்தப்பட்டது	1,52,219.61